துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.9.2025) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் சேக்கிழார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பல்வியில் நடைபெற்ற அரசு விழாவில் 824 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 743 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி. 7,297 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் உள்ளிட்ட 362.55 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு. கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன் உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

இன்று 12 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை,செப்.11-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்”திட்ட முகாம் இன்று (11.09.2025) திருவொற்றி யூர் மண்டலம் (மண்டலம்-1), வார்டு-4ல் ராமநாதபுரம் முதல் தெரு நடுநிலைப்பள்ளி எதிரில் உள்ள சமுதாயக் கூடம், மணலி மண்டலம் (மண்டலம்-2), வார்டு-16ல் ஆண்டார் குப்பம் பள்ளி மைதானம், தண்டையார் பேட்டை மண்டலம் (மண்டலம்-4), வார்டு-35ல் கொடுங்கையூர், எம்.ஆர்.நகரில் உள்ள முத்துகுமாரசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-54ல் வால்டாக்ஸ் சாலையில் உள்ள ஜே.கே. கன்வென்ஷன் ஹால், திரு.வி.க.நகர் மண்டலம் (மண்டலம்-6), வார்டு-69ல் அகரம் பார்த்தசாரதி தெருவில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானம், அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்-7), வார்டு-93ல் முகப்பேர், நந்தினி லட்சுமணன் தெருவில் உள்ள ஏ.எஸ்.என். மஹால், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம் - 8), வார்டு-94ல் வில்லிவாக்கம், எம்.டி.எச். சாலையில் உள்ள டி.கே.ஏ. திருமண மண்டபம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-111ல் ஆயிரம் விளக்கு, மாதிரி பள்ளிச் சாலையில் உள்ள சமுதாயக் கூடம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம் - 10), வார்டு-127ல் கோயம்பேடு, காளியம்மாள் கோயில் தெரு, சென்னை குடிநீர் வாரிய வளாகத்தில் உள்ள பேட்டரி மூன்று சக்கர வாகன நிறுத்துமிடம், அடையாறு மண்டலம் (மண்டலம் - 13), வார்டு-170ல் கோட்டூர் இரயில் நிலையம் அருகிலுள்ள ஹாக்கி விளையாட்டு மைதானம், பெருங்குடி மண்டலம் (மண்டலம் - 14), வார்டு-189ல் பள்ளிக்கரணை, ஐஐடி காலனி 3வது பிரதான சாலையில் உள்ள ஐஐடி சமுதாயக் கூடம், சோழிங்கநல்லூர் மண்டலம் (மண்டலம் - 15), வார்டு-199ல் பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளி ஆகிய 12 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நோயாளிகள் இனி

‘மருத்துவப் பயனாளர்கள்’ என அழைக்கப்படுவர்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை,செப்.11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, எச் ஐவி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த் தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் 2025 தொடக்கம்- மருத்துவமனை நோயாளர்கள் இனி “மருத்துவ பயனாளர்கள்” என்று அழைக்கப்படுவதற்கான அரசாணை ஓரிரு நாளில் வெளியிடப்படும் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழிப்புணர்வு பிரச்சாரத்தினை தொடங்கி வைத்து விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று (10.09.2025) சென்னை, கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பாக, எச்ஐவி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த் தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் - 2025 தொடங்கி வைத்து, உறுதிமொழி ஏற்று, விழிப்புணர்வு பதாகைகளை வெளியிட்டு, தனியார் மருத்துவக்கல்லூரிகளில் கூட்டு மருந்து சிகிச்சையினை தொடங்கி வைத்து, மாநில மற்றும் மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களிடையே நடைபெற்ற வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி, புதிய செஞ்சுருள் சங்கம், பள்ளி மாணவர்களிடையே வாழ்வியல் திறன் கல்வி பயிற்சி திட்டத்தினை தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

விழிப்புணர்வு பிரச்சாரம் - 2025

எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் பாதிப்புகளால் சிகிச்சை பெற்று வருபவர்கள் தமிழ்நாட்டில் 1,39,350 பேர் இருக்கிறார்கள். அவர்களை பாதுகாக்கும் பொருட்டும், புதிய எச்.ஐ.வி/எய்ட்ஸ் பால்வினை நோய்கள் பாதிப்புகள் வராமல் தடுக்கும் பொருட்டும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கடந்த 4.5 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தவகையில் இன்று எச்.ஐ.வி/எய்ட்ஸ் போன்ற பால்வினை நோய்த் தொற்றுகள் குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மருத்துவத்துறையின் நிதிநிலை அறிக்கையில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பால்வினை தொற்றுகளுக்கு பல்வேறு புதிய அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது. அறிவிப்பு எண் 114ன்படி, தமிழ்நாட்டில் உள்ள தனியார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் கட்டணமில்லாமல் எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்களுக்கு சிகிச்சை வழங்கிட வேண்டும் என்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தவகையில் முதற்கட்டமாக 4 தனியார் மருத்துவக்கல்லூரிகள் இந்த திட்டத்தில் இணைந்திருக்கிறார்கள். மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கன்னியாகுமரி மெடிக்கல் மிஷன், ஈரோடு நந்தா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, திருவள்ளூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகிய 4 தனியார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் எச்.ஐ.வி/எய்ட்ஸ், பால்வினை நோய்களுக்கு கட்டணமில்லாமல் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்க இன்று முதல் தொடங்கி வைக்கப்படுகிறது. அதற்கான ஆணைகள் சம்மந்தப்பட்ட கல்லூரி நிர்வாகங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அகில இந்திய அளவில் எச்ஐவி பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 0.23%. இது 2010ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் எச் ஐவி பாதிப்பு சதவிகிதம் என்பது 0.38% ஆக இருந்தது. தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் காரணமாக தற்போது தமிழ்நாட்டில் எச்ஐவி பாதிப்பு என்பது 0.16%. இதுவும்கூட எதிர்காலத்தில் 2030க்குள் எய்ட்ஸ் தொற்றில்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம் என்கின்ற உறுதிமொழியோடு இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டிருக்கிறது.

நோயாளர்கள் இனி “மருத்துவப் பயனாளர்கள்” என்று அழைக்கப்படுவர்!

மருத்துவ பயனாளர்கள் என்று அரசின் சார்பில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் அறிவிப்பை அரசாணையாக வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து மிக விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலை பெற்று இனி மேல் நோயாளிகள் என்று சொல்லக்கூடாது “மருத்துவப் பயனாளர்கள்” என்று சொல்ல வேண்டும் என்கின்ற வகையில் அந்த வாக்கியம் மாற்றப்படுகிறது.

இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ் குமார், அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், திட்ட இயக்குநர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, பொது சுகாதாரத்துறை இயக்குநர் மரு. சோமசுந்தரம், மருத்துவக் கல்வி இயக்குநர் மரு. சுகந்தி இராஜகுமாரி, நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன் மற்றும் தனியார் மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், கல்லூரி - பள்ளி மாணவர்கள் உடனிருந்தனர்.

கரூரில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில்

திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்பீர்!

மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் வேண்டுகோள்!

திருவள்ளூர் செப் 11;

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையில் நடைபெற்றது இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி. தலைமை செயற்குழு உறுப்பினர் கே. ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ் , நிவேதா ஜெசிகா, மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன். எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், எம்.முத்தமிழ்செல்வன், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர் , எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் முன்னதாக பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் வரவேற்பு உரையாற்றினார் . இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார் அப்போது பேசியது

மனித குலத்தின் சமூக விடுதலைக்கான மாபெரும் தலைவர் தந்தை பெரியார். தன் வாழ்நாளின் கடைசி நாட்கள் வரை சமூகநீதிக்காகச் சளைக்காமல் பாடுபட்ட திராவிட இயக்கப் பெருந்தலைவர் அவர். தன் மனதில் தோன்றிய சிந்தனைகளை எவருக்கும் அஞ்சாமல் துணிந்து கூறியவர். அவருடைய பகுத்தறிவு சுயமரியாதைச் சிந்தனைகள் சமுதாயத்தின் இருட்டை விரட்டி வெளிச்சத்தை உண்டாக்கின. தன்னுடைய கருத்துகளாகவே இருந்தாலும் அதனைக் கேட்பவர்கள் தங்களுடைய சொந்த புத்தியினால் சிந்தித்து, அதன் பிறகே ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய உலகச் சிந்தனையாளர் தந்தை பெரியார். அவர்களின் பிறந்த நாள் விழா தி.மு.கழகத்தை தோற்றுவித்தவரும், கடமை, கண்ணியம் கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு கற்றுத் தந்தவரும், தமிழ் இனம், தமிழ் மொழி என்ற உணர்வு மிக்க கருத்துக்களை மக்களிடம் பரப்பி தமிழருக்கு பாதுகாப்பு இயக்கமாக தி.மு. கழகத்தை மாற்றி அதன் மூலம் கழக ஆட்சியை தமிழ்நாட்டில் அமைத்தவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா. அவர்களின் பிறந்த நாள் விழாவும்

திராவிட இன மக்களின் உரிமைகளை பாதுகாத்திடவும், ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய நாள் விழாவை

தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு தி.மு.க. முப்பெரும் விழா கரூரில் வருகின்ற செப்டம்பர் 17 ஆம் தேதி அன்று நடைபெறுகிறது இந்த விழாவில் தி.மு.க.வினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று கழக தலைவரும், முதல்வர் அவர்கள் அழைப்பு விடுத்து உள்ளார்

எனவே திருவள்ளூர் மத்திய மாவட்டம் திமுக சார்பில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கழக இன்னாள் முன்னாள் மூத்த முன்னோடிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்

ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணியில் ஈடுபட்ட கழக நிர்வாகி அனைவருக்கும் கூட்டத்தின் வாயிலாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தந்தைபெரியார் படம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 4 ஆம் தேதி அன்று இங்கிலாந்து நாட்டில் உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பகுத்தறி பகலவன் தந்தைபெரியார் அவர்களின் உருவப்படத்தினை திறந்து வைத்து தந்தை பெரியார் அவர்களை மட்டுமல்ல நம்மையெல்லாம் பெருமை படுத்தியுள்ளார்.

தந்தை பெரியார் அவர்கள் சமூக நீதியை நிலையாட்டியது மட்டுமின்றி உலகிலே முதன் முதலில் ஆணுக்கு நிகர் பெண் என்ற சம தர்மத்தை உருவாக்க சேலத்தில்நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை உண்டு என்ற தீர்மானம் நிறைவேற்றியர் தந்தை பெரியார் அல்லவா? அக்காலத்தில் பெண்களுக்காக போராடிய உலகத்திலேயே ஒரே தலைவர், அடித்தட்டு மக்களுக்காக தன் வாழ்நாள் கடைசிவரை குரல் கொடுத்த பெரியவர், தொட்டால் தீட்டு, கோவிலுக்குள் நுழைய தடை என்பதையெல்லாம் உடைந்தெரிந்து

இப்படிப்பட்ட பகுத்தறிவுப் பெரியவர், தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்தவர், அப்படிப்பட்ட பெருமைக்குரிய தந்தை பெரியார் அவர்களின் புகழை உலகெங்கும் பரப்பிடும் வகையில், உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை திருந்து வைத்து தந்தை பெரியார் அவர்களுக்கு மணிமகுடம் சூட்டியுள்ளார். இப் பெருமைக்கு சொந்தக்காரரான பகுத்தறிவாளன் தந்தை பெரியார். அவர்களின் இன்றைய பேரனாக விளங்கும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகம் பாராட்டு நன்றி தெரிவித்து கொள்கிறேன் இதில் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாநகர ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் டி.தேசிங்கு, ஆர். ஜெயசீலன், ஜி.ஆர்.திருமலை, கே.பிரேம் ஆனந்த், தி. வை.இரவி, என்.இ.கே.மூர்த்தி, முரளிகிருஷ்ணன், தங்கம்முரளி, பேபிசேகர், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சுரேஷ் குமார், வே.தியாகராஜன், சங்கீத சீனிவாசன், பெ.வினோத், ஏ.ஜெ. பவுல், த.குமரேசன், பிரவீன் குமார், எம்.இளையான், எஸ். சௌந்தரராஜன், கு.தமிழ்செல்வி, ஏ.விமல் ஆனந்த், ஏ.ஜெ.ரவி, ஒ.ஆர். நாகூர்கனி, எம்.மோகன், என். சன்முகம், எஸ்.நிஜலிங்கம், க.ஷாஜகன், ஜி.ராஜேஷ் குமார், ஐ.ஜாக்கப், வி.பார்த்திபன், பசீர் அகமது அலிகான், ஆதிகேசவன், மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர் முடிவில் பேரூர் கழகச் செயலாளர் தி.வே.முனுசாமி நன்றி கூறினார்.

கோடுவெளி தங்கம் முரளி தலைமையில்

செம்பேடு வி.செல்வம் இல்ல விழா!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைக்கிறார்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ பங்கேற்பு!

திருவள்ளூர் செப் 11;

திருவள்ளூர் மத்திய மாவட்டம் எல்லாபுரம் மத்திய ஒன்றியம் தகவல் தொழில் நுட்ப அணி சமூக வலைத்தளம் ஒருங்கிணைப்பாளர் செம்பேடு வி.செல்வம் எஸ்.ரூபாவதி இல்ல புதுமண புகுவிழாநாளை 12 092025 வெள்ளிக்கிழமை காலை 7:30 மணி அளவில் செம்மேடு பஜனை கோவில் தெரு கிராமத்தில் நடைபெறுகிறது.

இதில் ஒன்றிய கழக செயலாளர் கோடுவெளி தங்க முரளி தலைமை தாங்குகிறார். ஒன்றிய கழக செயலாளர்கள் பி.ஜெ.மூர்த்தி. ஆ.சத்திய வேலு. மாவட்டத் துணைச் செயலாளர் வி.ஜெ.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். நிர்வாகிகள் பி.ஜி.முனுசாமி. எம்.குமார். இ.சுப்பிரமணி. உமா சீனிவாசன். ஜி.பாஸ்கர். டி.பாஸ்கர். கே.ஜி. அன்பு. என். நாராயணசாமி எம். எல்.டேவிட். ஏ.சுப்பிரமணி. வி.ஸ்ரீதர். எஸ்.ஆளவந்தான். என். தங்கராஜ். எஸ்.ரகு. என்.எம்.விஜயகுமார். வ.நாகராஜ் ஆகியோர் வரவேற்புரையாற்றிகிறார்கள் புதுமணை இல்லத்தை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் திறந்து வைக்கிறார். இதில் கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

சேலம் மத்திய மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம், செப் 11-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் மத்திய மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் 13.09.2025 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ஜி.கே. சுபாசு தலைமையில் மாவட்டக் கழக இக்கூட்டத்தில் அலுவலகமான மாவட்டக் “கலைஞர் மாளிகை “யில் நடைபெறவுள்ளது. கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள்,மாநகர வட்டக்கழக செயலாளர்கள், மற்றும் அனைத்து சார்பு அணிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. துணை முதலமைச்சர் இளம் தலைவர் அவர்கள் சேலம் வருகை.

2. அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா.

3.கரூரில் நடைபெறும் முப்பெரும் விழா.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

லண்டன் வாழ் தமிழர்களிடமும் –

பென்னிகுயிக் குடும்பத்தினரிடமும் முதல்வர் பேசியது நெகிழ வைத்தது!

கேம்பர்லி தமிழர் – பிரிட்டிஷ் அசோசியேஷன் செயலாளர் சந்தான பீர் ஒலி அறிக்கை!

லண்டன், செப். 11-

லண்டன் வாழ் தமிழர்களிடமும் பென்னிகுயிக் குடும்பத்தினரிடமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளாவளாவியது நெகிழ வைத்தது என்று கேம்பர்லீ தமிழர் பிரிட்டிஷ் அசோசியேஷன் செயலாளர் சந்தான பீர் ஒலி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கேம்பர்லி தமிழர் பிரிட்டிஷ் அசோசியேஷன் செயலாளர் சந்தான பீர் ஒலி அறிக்கை வருமாறு:-

கலாச்சார இணைப்புத் திட்டம் என்பது இருநாடுகளைச் சேர்ந்த முக்கிய நகரங்கள் ஒருங்கிணைக்கப்படும். இதன்மூலம் கல்வி, சுற்றுலா, வர்த்தகம் உட்பட பல்வேறு துறைகள் சார்ந்த சிறப்பம்சங்களை இருநகரங்களும் பரிமாறிக் கொள்ளும். அதன்படி தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய நகரங்கள் ஏற்கெனவே அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, மலேசியா உள்ளிட்ட நாடுகளில் உள்ள முக்கிய நகரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் நூற்றாண்டு காலம் தொடர்புள்ள கேம்பர்லீ மற்றும் மதுரை நகரங்களும் இத்திட்டத்தின்கீழ் இணைக்கப்பட உள்ளன.

தமிழர் பண்பாட்டை மதுரை நகரம் முழுமையாக பிரதிபலித்து வருகிறது. கோயில்களின் பாரம்பரிய விழாக்கள் ஆகியவற்றின் வழியாக மதுரை உலகம் முழுவதும் தமிழர் பண்பாட்டின் மையமாகப் போற்றப்படுகிறது. அதேபோல், கேம்பர்லீ நகரமும் கல்வி, வரலாறு, சமூக மேம்பாடு, சுற்றுலா ஆகிய துறைகளில் தனித்துவமாக விளங்குகிறது. இவ்விரு நகரங்களும் ஒருங்கிணைந்தால் பல்வேறு பலன்களை தமிழகம் பெறும்.

கேம்பர்லீ நகரத்தில் 6 பெரிய பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் மதுரை மாணவர்கள் இளைஞர் பரிமாற்றத்தில் கல்வி பயிலலாம். கீழடி உட்பட தொன்மங்கள் குறித்து ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்தலாம். மதுரையின் கோயில்கள், விழாக்கள், கைவினைப் பொருட்கள் மூலமாக நமது கலாச்சாரம் உலகளாவிய வரவேற்பை பெறும். புதிய தொழில் முதலீடுகள் வரும். சுற்றுலாவை மேம்படுத்துவதுடன் விமானப் போக்குவரத்தும் விரிவு செய்ய

இத்தகைய அம்சங்களை முன்வைத்து முதல்வர் ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்தோம். இது சார்ந்து கேம்பர்லீ நகரம் அமைந்துள்ள சர்ரே மாகாணத்தின் மேயரும், கலாச்சார இணைப்பு திட்டத்தில் சேர சம்மதம் தெரிவித்து முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார். அதையேற்று கடந்த வாரம் லண்டன் வந்திருந்தபோது இத்திட்டத்தை முன்னெடுப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார். இதன்மூலம் இருநகரங்களும் சிறந்த வளர்ச்சியை பெறும்.

பென்னிகுயிக் குடும்பத்தினர்!

லண்டனில் பென்னி குயிக் பேத்திகள் மேரி மற்றும் செர்லீ ஆகியோரிடம் முதல்வர் பேசினார். அப்போது, “தாங்கள் அவ்வப்போது தமிழகம் வந்துசெல்ல வேண்டும். அங்கு யாருமில்லை என நினைக்க வேண்டாம். தமிழகத்தில் உள்ள அனைவரின் இல்லமும் தங்களை வரவேற்கும். அதில் முதல் வீடாக எனது இல்லத்தை நினைத்துக் கொள்ளுங்கள். மேலும், ஏதேனும் உதவிகள் தேவை என்றாலும் நீங்கள் தயக்கப்படாமல் கேளுங்கள்” என்று முதல்வர் உரிமையுடன் பேசியுள்ளார்.

இதை கேட்டு மகிழ்ச்சியில் கண்கலங்கிய பென்னி குயிக் குடும்பத்தினர், நிச்சயம் தமிழகம் வருவதாகவும் உறுதி தெரிவித்தனர். பொங்கல் திருவிழா, ஜல்லிக்கட்டு மற்றும் மதுரை கேம்பர்லீ நகரங்கள் இணைப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கவும் அழைப்பு விடுத்தார். இதைக் கேட்டு நெகிழ்ந்த அந்த நாட்டின் பிரமுகர்கள் தமிழர்களின் நன்றியுணர்வு வியக்க வைப்பதுடன் பெருமைப்பட பேசினார் என்று பிரிட்டன் வாழ் தமிழர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு சந்தான பீர் ஒலி தெரிவித்துள்ளார்.